நகராட்சி அலுவலகம்,724
பெரியகுளம்.

நாள். 27.09.2019.

## மன்றக் கூட்ட அறிவிப்பு

2019ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ம் நாள்.27.09.2019 ஸ்ரீ விகாரி வருடம் புரட்டாசி 10ம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு கீழ்கண்ட பொருட்களைப் பற்றி முடிவு செய்ய மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெற்றது.

1. **பொருள் :–** இந்நகராட்சி பொறியாளர் திரு.ஆர்.திருமலைவாசன் அவர்களின் ஆகஸ்ட் 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.கஎண். 1116/2016/சி1)

**தீர்மான எண்:** 724
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

2. **பொருள் :–** பெரியகுளம் நகராட்சி வ.உ.சி. பூங்காவில் உள்ள வடகரை மேலேற்றும் பம்பு யூனிட் பழுது ஏற்பட்டதை பழுது நீக்கப்பணிகள் செய்திடவும் மற்றும் 15ஹெச்.பி மின் மோட்டாரில் பழுது ஏற்பட்டதை பழுதுநீக்கப்பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் குடிநீர்ப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பழுதுநீக்கப்ப பணிகள் செய்திட விலைப்புள்ளி கோரப்பட்டது. கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் | விலைப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|
| 1. | A.T. ராஜா கியாஸ் & ஆர்க் வெல்டிங் லேத் ஒர்க்ஸ், பெரியகுளம் | ரூ.4,970/– |
| 2. | சரஸ்வதி வெல்டிங் & லேத் ஒர்க்ஸ், பெரியகுளம் | ரூ.5,225/– |
| 3. | ஸ்ரீ சாய் ராஜா வெல்டிங் & லேத் ஒர்க்ஸ் | ரூ.5,150/– |

**அலுவலகக்குறிப்பு :-**

1. அவசர அவசியம் கருதி குடிநீர் பணி மேற்கொள்ள முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள A.T. ராஜா கியாஸ் & ஆர்க் வெல்டிங் லேத் ஒர்க்ஸ், அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.களண். 1729/2019/இ1)

**தீர்மான எண்:** 725

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

3. **<u>பொருள்</u> :–** பெரியகுளம் நகராட்சியில் இணையதள பயன்பாட்டிற்கு பி.எஸ்.என்.எல். மூலம் இணைப்பு பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் இணையதள இணைப்பு அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு வருவதால் இந்நகராட்சியில் இணையதள மூலம் மேற்கொள்ளப்படும் பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்கும் பணிகள், கட்டிட அனுமதி வழங்கும் பணிகள், மற்றும் மின்னஞ்சல் அனுப்பும் பணிகளும் அனைத்தும் தாமதம் ஏற்படுகின்றது. எனவே கூடுதல் இணைப்பாக ஏர்டெல் OFC மூலம் இணையதள வசதியினை Winet Solution நிறுவனத்தின் மூலம் இணைப்பினை பெற்றிட அனுமதிக்கும், அதற்கான இணைப்பு பெறுவதற்கான கட்டணத் தொகை ரூ.6000/– மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி செலுத்திடவும், மேலும் மாதாந்திர கட்டணத் தொகையினை செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1785/2019/பி2)

**தீர்மான எண்:** 726

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

4. **<u>பொருள்</u> :–** பெரியகுளம் நகராட்சி அலுவலகத்தில் இரண்டு கணினி வசூல் மையங்களில் வசூல் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வசூல் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் பணம் எண்ணும் இயந்திரம் (Counting Machine) ஒன்று பழுது ஏற்பட்டு பயன்படுத்த இயலாமல் உள்ளதால் வசூல் மையத்திற்கு வரும் ரூபாய் நோட்டுக்கள் சோதனை செய்து கண்டறிய சிரமமாக உள்ளது. எனவே அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Sajob Electronics மதுரை நிறுவனத்தின் மூலம் மேற்படி பழுதடைந்த பழைய இயந்திரத்தினை Buy back முறையில் எடுத்துக் கொண்டு பணத்தினை வரிசைப்படுத்துதல் மற்றும் கள்ள நோட்டுக்களை சோதனை செய்யும் புதிய பணம் எண்ணும் இயந்திரத்தினை (Counting Machine) வாங்கிட அனுமதிக்கும், அதற்கான உத்தேசத் செலவினத் தொகை ரூ.16,000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :–**

1. மேற்படி பழைய இயந்திரத்தினை Buy back முறையில் எடுத்துக் கொண்டு புதிய பணம் எண்ணும் இயந்திரம் (Counting Machine) வாங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1836/2019/இ1)

**தீர்மான எண்:** 727

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

5. **<u>பொருள்</u> :–** பெரியகுளம் நகராட்சி பொறியியல் பிரிவு பயன்பாட்டில் உள்ள TN60K8842 ஈப்பு வாகனத்தின் சக்கரம் பழுது ஏற்பட்டதால் வாகனம் பயன்படுத்திட சிரமமாக உள்ளது. எனவே மேற்படி வாகனத்தில் சக்கரங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகள் மற்றும்இதர பழுது நீக்கம் செய்திட அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனமான பாண்டியன் ஆட்டோ மொபைல்ஸ், பெரியகுளம் நிறுவனத்தின் மூலம் பணிகள் செய்திட அனுமதிக்கும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.21,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :-**

மேற்படி பணிக்கு செலவினத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1817/2019/இ1)

**தீர்மான எண்:** 728

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

6. **<u>பொருள்</u> :–** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.09ல் அம்மையநாயக்கனுர் ரோடு என்ற விலாசத்தில் அமைந்துள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான ஆடடிமனைக்கு (Slaughter House) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் பெறப்பட்ட இசைவானை 31.03.2019 அன்று முடிவுற்றமையால் 2019–2020ம் ஆண்டிற்கு இசைவாணை பெறுவதற்கு கட்டணம் செலுத்தி புதுப்பிப்பதற்கு செலவினம் தொகை ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தொகை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.5436/2014/எச்1)**

**தீர்மான எண்:** 729

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

7. **<u>பொருள்</u> :–**_பெரியகுளம் நகராட்சியில் உள்ள அனைத்து கணினிகளுக்கும் இணையதள இணைப்பு வழங்கும் கணினி பிரிவில் உள்ள D-Link சுவிட்சு பழுது ஏற்பட்டுள்ளதால் இணையதள வசதி மூலம் பணி மேற்கொள்ள சிரமமாக உள்ளது. எனவே புதியதாக LINK 24 POR ETHNET D SWITCH வாங்கிட அனுமதிக்கும், அதற்கான உத்தேசத் செலவினத் தொகை ரூ.5000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.கஎண். 1838/2019/இ1)

**தீர்மான எண்:** 730

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

8. **<u>பொருள்</u> :–** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் வணிக வளாக கடைகளுக்கு உரிய காலம் முடிவடைந்துவிட்டதால் மேற்படி உரிய காலத்தினை கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி நீட்டிப்பு செய்து வழங்கிட உரிமதாரர்கள் விண்ணப்பம் அளித்துள்ளனர்.

| வ. எண். | உரிமதாரர் விபரம் மற்றும் கடை விபரம் | பழைய மாத வாடகை | உயர்வு செய்யப்பட வேண்டிய மாத வாடகை | உரிம காலம் |
|---|---|---|---|---|
| 1 | S.காளிச்சாமி<br>புதிய பேருந்து நிலைய வணிக வளாகம்<br>கடை எண்.8 (2005234) | 5175/– | 5951/– | 01.09.2019 முதல்<br>31.08.2022 வரை<br>(மூன்றாவது உரிமம்) |
| 2 | M.B.பாலுமகாராஜா<br>தோட்டி காலனி<br>வணிக வளாகம் பி பிளாக்<br>கடை எண்.11 (2005235) | 1042/– | 1198/– | 19.09.2018 முதல்<br>18.09.2021 வரை<br>(மூன்றாவது உரிமம்) |
| 3 | S. சாந்தி<br>கடை எண்.1<br>வடக்கு பாரஸ்ட் ரோடு<br>வணிக வளாகம் (2005240) | 776/– | 892/– | 01.01.2019 முதல்<br>31.12.2021 வரை<br>(மூன்றாவது உரிமம்) |
| 4 | தனி அலுவலர்<br>கூட்டுறவு பண்டக சாலை<br>'பி பிளாக்', கடை எண்.1<br>வி.ஆர்.பி. வணிக வளாகம்<br>(2005251) | 2504/– | 2880/– | 01.07.2019 முதல்<br>30.06.2022 வரை<br>(இரண்டாவது உரிமம்) |
| 5 | ஜி.செபஸ்தியான்,<br>மகப்பேறு மருத்துவமனை<br>வணிக வளாகம் கடை<br>எண்.11, (2005247) | 1179 /– | 1356/– | 07.09.2019 முதல்<br>06.09.2022 வரை<br>(மூன்றாவது உரிமம்) |
| 6 | எஸ்.ஏ.கடற்கரை,<br>புதிய பேருந்து நிலைய<br>வணிக வளாகம் கடை<br>எண்.16, (2005186) | 5175/– | 5951/– | 01.09.2019 முதல்<br>31.08.2022 வரை<br>(மூன்றாவது உரிமம்) |
| 7 | ஆவின் பாலகம்,<br>புதிய பேருந்து நிலைய<br>வணிக வளாகம், (2005162) | 1840/– | 2116/– | 01.10.2019 முதல்<br>30.09.2022 வரை<br>(மூன்றாவது உரிமம்) |

அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007–ன்படி மேற்படி கடைகளுக்கு பழைய மாத வாடகையிலிருந்து 15% உயர்வு செய்யப்பட்ட தொகையை மாத வாடகையாக வசூலிக்கவும் உரிமம் முடிவுற்ற காலத்திலிருந்து 3 ஆண்டுகள் உரிமம் நீட்டிப்பு வழங்க மன்றம் அனுமதி பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

மேற்காணும் கடைகளுக்கு பழைய மாத வாடகையிலிருந்து 15% உயர்வு செய்யப்பட்ட தொகையை மாத வாடகையாக வசூலிக்கவும் உரிமம் முடிவுற்ற காலத்திலிருந்து 3 ஆண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு செய்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.கஎண். 4886/2007/அ2)

**தீர்மான எண்:** 731

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

9. **<u>பொருள்</u> :–** பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் சேகரமாகும் Sanitary Napkin Burning Machine பொருத்தும் பணி மேற்கொள்ள இந்நகர்மன்றம் தீர்மானம் எண்.**643**, நாள்.**06.06.2019**ன்படி அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படியான மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ | வரப்பெற்ற விலைப்புள்ளி விபரம் | குறைவான விலைப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | உரக்கிடங்கில் சேகரமாகும் Sanitary Napkin Burning Machine பொருத்தும் பணி மேற்கொள்ளுதல் | ரூ.6,000/– | 1. காமாட்சி எலெக்ட்ரிக்கல், 7 நகராட்சி வணிக வளாகம், வைகை அணை ரோடு, தென்கரை பெரியகுளம், விலை ரூ.4,920/–<br>2. பாஸ் ஏஜென்சிஸ், ஹார்டு வேர் அன்ட் கெமிக்கல்ஸ், வைகை அணை ரோடு , பெரியகுளம். விலை ரூ.5,295/–<br>1. ஜாவா பவர்ஸ், ஹார்டு வேர் அன்ட் கெமிக்கல்ஸ், வைகை அணை ரோடு , பெரியகுளம். விலை ரூ.5,564/– | காமாட்சி எலெக்ட்ரிக்கல்ஸ், 7 நகராட்சி வணிக வளாகம், வைகை அணை ரோடு, தென்கரை பெரியகுளம், விலை ரூ.4,920/– |

**<u>அலுவலக குறிப்பு.</u> :–**

1. மன்றத்தின் அனுமதி பெற்று வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள காமாட்சி எலெக்ட்ரிக்கல்ஸ், 7 நகராட்சி வணிக வளாகம், வைகை அணை ரோடு, தென்கரை பெரியகுளம் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.348/17/எச்1)**
**தீர்மான எண்:** 732
**தீர்மானம்** **:** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

10. **<u>பொருள்</u> :–** இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் குப்பைகளை அரைப்பதற்கு பயன்படுத்தப்படும் Organic Pulverizer Tractor – உடன் இணைத்து தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கு தேவையான மின் மோட்டர், இணைப்பு பொருட்கள் வழங்கும் பணி மேற்கொள்ள இந்நகர்மன்றம் தீர்மானம் எண்.691, நாள்.28.06.2019ன்படி அனுமதி அளிக்கப்பட்டு 28.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விபரப்படியான இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம் | குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | Organic Pulverizer Tractor – உடன் இணைத்து தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கு தேவையான மின் மோட்டர், இணைப்பு பொருட்கள் வழங்குதல் மற்றும் பொருத்தும் பணி மேற்கொள்ளுதல் | ரூ.12,000/– | 1. காமாட்சி எலெக்ட்ரிக்கல், 7 நகராட்சி வணிக வளாகம், வைகை அணை ரோடு, தென்கரை பெரியகுளம், விலை ரூ.11,600/– | காமாட்சி எலெக்ட்ரிக்கல், 7 நகராட்சி வணிக வளாகம், வைகை அணை ரோடு, தென்கரை பெரியகுளம், விலை ரூ.11,600/– |
| | | | 2. பாஸ் ஏஜென்சிஸ், ஹார்டு வேர் அன்ட் கெமிக்கல்ஸ், வைகை அணை ரோடு , பெரியகுளம். விலை ரூ.11,800/– | |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றத்தின் அனுமதி பெற்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள காமாட்சி எலெக்ட்ரிக்கல், 7 நகராட்சி வணிக வளாகம், வைகை அணை ரோடு, தென்கரை பெரியகுளம், அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.348/2017/எச்1)

**தீர்மான எண்:** 733
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

11. **<u>பொருள்</u> :–** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் Domestic Hazardous waste சேகரம் செய்ய தேவையான பக்கெட்டுகள் விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ள இந்நகர்மன்றம் தீர்மானம் எண்.692, நாள்.28.06.2019ன்படி அனுமதி அளிக்கப்பட்டு 28.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விபரப்படியான இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம் | குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் Domestic Hazardous waste சேகரம் செய்ய தேவையான பக்கெட்டுகள் விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ளுதல் | ரூ.15,000/– | 1. காமாட்சி எலெக்ட்ரிக்கல், 7 நகராட்சி வணிக வளாகம், வைகை அணை ரோடு, தென்கரை பெரியகுளம், விலை ரூ.14,300/–<br>2. ஜாவா பவர்ஸ், ஹார்டுவேர் அன்ட் கெமிக்கல்ஸ், வைகை அணை ரோடு, பெரியகுளம். விலை ரூ.14,700/– | காமாட்சி எலெக்ட்ரிக்கல், 7 நகராட்சி வணிக வளாகம், வைகை அணை ரோடு, தென்கரை பெரியகுளம், விலை ரூ.14,300/– |

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றத்தின் அனுமதி பெற்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள காமாட்சி எலெக்ட்ரிக்கல், 7 நகராட்சி வணிக வளாகம், வைகை அணை ரோடு, தென்கரை பெரியகுளம், அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.348/2017/எச்1)

**தீர்மான எண்:** 734
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

12. <u>பொருள்</u> **:–** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வராகநதிக்கரை ஓரங்களில் பொதுமக்கள் குப்பைகள் போடாத வண்ணம் விழிப்புணர்வு பதாகைகள் பொருத்தும் பணி மேற்கொள்ள இந்நகர்மன்றம் தீர்மானம் எண்.654, நாள்.06.06.2019ன்படி அனுமதி அளிக்கப்பட்டு 29.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விபரப்படியான இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம் | குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | வராகநதிக்கரை ஓரங்களில் பொதுமக்கள் குப்பைகள் போடாத வண்ணம் விழிப்புணர்வு பதாகைகள் பொருத்தும் பணி மேற்கொள்ளுதல் | ரூ.50,000/– | 1. காமாட்சி எலெக்ட்ரிக்கல், 7 நகராட்சி வணிக வளாகம், வைகை அணை ரோடு, தென்கரை பெரியகுளம், விலை ரூ.49,000/–<br>2. ஜாவா பவர்ஸ், ஹார்டுவேர் அன்ட் கெமிக்கல்ஸ், வைகை அணை ரோடு , பெரியகுளம். விலை ரூ.49,600/– | காமாட்சி எலெக்ட்ரிக்கல், 7 நகராட்சி வணிக வளாகம், வைகை அணை ரோடு, தென்கரை பெரியகுளம், விலை ரூ.49,000/– |

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றத்தின் அனுமதி பெற்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள காமாட்சி எலெக்ட்ரிக்கல், 7 நகராட்சி வணிக வளாகம், வைகை அணை ரோடு, தென்கரை பெரியகுளம், அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.655/2015/எச்1)

**தீர்மான எண்:** 735
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

13. **பொருள் :–** பெரியகுளம் நகராட்சி இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் அருகிலிருந்து 100 மீட்டர் பரப்பளவிற்கு எந்த ஒரு தனியார் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் செயல்பட கூடாதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பெரியகுளம் நகராட்சி வடகரை புதிய பேருந்து நிலையம் எதிரில் திரு. A.G.சதீஸ்குமார் என்பவர் சைக்கிள் ஸ்டாண்டு வைக்க சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி இரண்டு வழக்குகளை தொடர்ந்து வழக்கு எண்கள். W.P.(MD) No.21921/2018 மற்றும் W.P.(MD) No.6295/2018 க்கு எதிராக W.A.S.R. (MD)No.67093/19 மற்றும் W.A.S.R. (MD)No.67094/19 மேல்முறையீடு செய்து வழக்கு தொடர இந்நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.எம்.கருப்பசாமி பாண்டியன் அவர்கள் ஆஜராகவதற்கும் அதற்கான வழக்கறிஞர்

கட்டணம் ரூ.15000 + ரூ.15000 = ரூ.30000/– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. முன்அனுமதி பெற்று வழக்கு கட்டணம் திரு.எம்.கருப்பசாமி பாண்டியன் அவர்களுக்கு ரூ.30,000/– வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(நக.எண். 2028/2018/எப்1)
**தீர்மான எண்:** 736
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

14. **<u>பொருள்</u> :–** பெரியகுளம் நகராட்சி தென்கரை பகுதியில் உள்ள அனைத்து பொது கழிப்பிடங்களும் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாகவும் மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தில் திறந்தவெளி மனித கழிவுகள் இல்லாத நிலையினை (ODF) புதுப்பிக்க வேண்டியுள்ளதால், மேற்படி பொதுக்கழிப்பிடங்களில் தேவையான மராமத்து பணிகள் செய்து தருமாறு நகர் நல அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் ஆகியோர்களால் தெரிவிக்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சி தென்கரை பகுதியில் உள்ள அனைத்து பொதுக் கழிப்பிடங்களை நேரடியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன்படி தேவையான மராமத்து பணிகள் செய்திட ரூ.2.25 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன்படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1833/2019/இ1)
**தீர்மான எண்:** 737
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

15. **<u>பொருள்</u> :–** பெரியகுளம் நகராட்சி வடகரை பகுதியில் உள்ள அனைத்து பொது கழிப்பிடங்களும் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாகவும் மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தில் திறந்தவெளி மனித கழிவுகள் இல்லாத நிலையினை (ODF) புதுப்பிக்க வேண்டியுள்ளதால், மேற்படி பொதுக்கழிப்பிடங்களில் தேவையான மராமத்து பணிகள் செய்து தருமாறு நகர் நல அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் ஆகியோர்களால் தெரிவிக்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சி வடகரை பகுதியில் உள்ள அனைத்து பொதுக் கழிப்பிடங்களை நேரடியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன்படி தேவையான மராமத்து பணிகள் செய்திட ரூ.2.25 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன்படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1832/2019/இ1)
**தீர்மான எண்:** 738
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

16. **<u>பொருள்</u> :–** பெரியகுளம் நகராட்சி வாக்குச்சாவடி பட்டியலில் உள்ள வாக்காளர்களின் பெயர், பிறந்த தேதி, உறவினர் முறை, புகைப்படம் மற்றும் முகவரி போன்ற இதர விபரங்களை சரிபார்க்க வாக்காளர்கள் சரிபார்ப்பு படிவம் அச்சடிக்கும் பணியினை செய்வதற்கு விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் | விலைப்புள்ளி தொகை (1 எண்ணம்) |
|---|---|---|
| 1 | Parvin Computer Xerox, Maruthupandian Street, K.K.Nagar, Madurai | 0.78 பைசா |
| 2 | Devan Offset Printers, Annanagar, Madurai | 0.85 பைசா |
| 3 | Dheen Graphics, D.T.P Offset, Karumpalai, Madurai | 0.90 பைசா |

**<u>அலுவலக குறிப்பு</u> :-**

1. அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று மேற்கண்ட பணிகள் செய்வதற்கு விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Parvin Computer Xerox, Maruthupandian Street, K.K.Nagar, Madurai அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று படிவம் அச்சடிக்க வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4096/2007/ எப்1

**தீர்மான எண்:** 739

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

17. **<u>பொருள்</u> :–** தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட வசதிகள் 2019– ன்படி நகராட்சி பகுதிகளில் கட்டப்படும் அனைத்து கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு கட்டாயம் உருவாக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பெரியகுளம் நகராட்சி பகுதிகளில் கட்டப்படும் அனைத்து கட்டிடங்களுக்கும் கட்டிட அனுமதி கோரி வரும் விண்ணப்பங்களில் 01.10.2019ஆம் தேதி முதல் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புக்கான வைப்புத்தொகை கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து வசூல் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**Deposit for RWH**
**For RESIDENTIAL**

0 to 500 Sq.Ft - Rs. 5000/-
500 to 1200 Sq Ft - Rs. 8000/-
1200 to 2400 Sq Ft - Rs.10000/-
Above 2 400 Sq Ft - Rs. 15000/-

**for COMMERCIAL**

0 to 500 Sq.Ft - Rs. 5000/-
500 to 1200 Sq Ft - Rs. 8000/-
1200 to 2400 Sq Ft - Rs.10000/-
Above 2 400 Sq Ft - Rs. 15000/-

**அலுவலக குறிப்பு :-**

1. மேற்கண்ட மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புக்கான வைப்புத்தொகையினை 01.09.2019ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்திட மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. கட்டிட உரிமையாளர்களால் உரிய முறையில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்து உரிய புகைப்படம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் நேராய்வு செய்து உரிய வழிமுறைகளின்படி அமைக்கப்பட்டிருந்தால், வைப்புத்தொகையினை அக்கட்டிட உரிமையாளர்களுக்கு திரும்ப வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1241 /2019/இ2)

**தீர்மான எண்:** 740

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

18. **பொருள் :–** பெரியகுளம் நகராட்சியில் பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கல் பணியில் தொழில் நுட்பம் மற்றும் தொழில் நுட்பம் அல்லாத பணியிடங்களை 01.10.2019 முதல் 30.09.2020 வரையுள்ள காலத்திற்கு நீடித்து வைத்து கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கீழ்கண்ட பணியிடங்களுக்கு அனுமதி பெறுவதற்கு கருத்துரு அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பணியிடங்கள்**

1. பொறியாளர் நிலை II –1
2. சூயேஜ் கிளினர் – 6
3. டிரைனேஜ் கிளினர் – 2
4. சூயேஜ் கூலி – 6
5. பம்ப் ஹவுஸ் காவலர் – 1
6. சூயேஜ் காவலர் – 1
7. மின் பணியாளர் நிலை II – 1
8. பவர் டில்லர் ஓட்டுநர் – 1
9. பைப் லைன் பிட்டர் நிலை II – 1

**அலுவலகக்குறிப்பு : –**

மேற்கண்ட பணியிடங்கள் 1978ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி பெறப்பட்டு தொடர்ந்து அனுமதி புதுப்பிக்கப்பட்டு வருகிறது. பொறியியல் பிரிவில் தொழில்நுட்பம், குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு, புதைவடிகால் பராமரிப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ள இப்பணியிடங்கள் மிகவும் அவசியமானதாகும். எனவே 01.10.2019 முதல் 30.09.2020 முடிய காலத்திற்கு நீடித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுமதி பெற மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1843/19/சி1)

**தீர்மான எண்:** 741

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

19. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சி சுதந்திரவீதி பகுதியில் உள்ள அம்மா உணவக கட்டிடத்தில் மின் விளக்குகள் மற்றும் மின் விசிறிகள் பழுது ஏற்பட்டதால், பழுதுநீக்கப்பணிகள் மேற்கொண்டு தேவையான மின்வசதிப் பணிகள் செய்திடவும் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் நகர்நல அலுவலர் அறையில் பயன்படுத்தப்பட்டு வரும் குளிரூட்டும் இயந்திரத்திற்கு தனியாக மின்வயரிங் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மான எண். 722 நாள்.28.08.2019ல் அனுமதி பெறப்பட்டது. அதன்படி மேற்படி பணிக்கு 24.09.2019ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் விபரம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | பெரியகுளம் நகராட்சி சுதந்திரவீதி பகுதியில் உள்ள அம்மா உணவக கட்டிடத்தில் மின்வசதி பணிகள் செய்தல் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் நகர்நல அலுவலர் அறையில் பயன்படுத்தப்பட்டு வரும் குளிரூட்டும் இயந்திரத்திற்கு தனியாக மின்வயரிங் அமைக்கும் பணிகள் செய்தல் | ரூ.0.45 லட்சம் | திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரர் பெரியகுளம் மதிப்பீட்டு விலையை விட 0.11 % குறைவு | திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரர் பெரியகுளம் மதிப்பீட்டு விலையை விட 0.11 % குறைவு |
| 2. | | | N. பொன்மணி, ஆகாஷ் கன்சல்டன்சி, ஒப்பந்ததாரர் தேனி மதிப்பீட்டு விலையை விட 0.28% அதிகம் | |

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.C.முத்துப்பாண்டி, பாண்டிச்செல்வி, ஒப்பந்ததாரருக்கு பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1560/2019/இ1)

**தீர்மான எண்:** 742

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

20. <u>பொருள்</u> :– பெரியகுளம் நகராட்சி வார்டு எண். 1 முதல் 30 வரை உள்ள அனைத்து பகுதிகளிலும உள்ள பொதுமக்களுக்கு நாளொன்றுக்கு 58.00 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் சுத்திகரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் குளோரின் சிலிண்டரிலிருந்து வரும் லைன் மற்றும் மீட்டர் ஆகியவை புதிதாக அமைக்கப்பட்டு மூன்று வருடங்களுக்கு மேல் ஆகியுள்ளதால் குளோரின் சிலிண்டர் குழாய்கள் மற்றும் வால்வுகளில் கசிவு ஏற்பட்டதை சரி செய்யும் பணிகள் மேற்கொள்ளவும், மேலும் குளோரின் சிலிண்டர் உள்ள இடத்தில் ஒரு புதிய செட் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மான எண். 547 நாள்.11.02.2019ல் அனுமதி பெறப்பட்டது. அதன்படி மேற்படி பணிக்கு 26.09.2019ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | வரப்பெற்ற ஒப்பந்ததாரர் விபரம் (ஒரு சிலிண்டருக்கு) | குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | குடிநீர் சுத்திகரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் குளோரின் சிலிண்டர் குழாய்கள் மற்றும் வால்வுகள் மாற்றம் செய்தல், புதிய செட் அமைக்கும் பணிகள் செய்தல் | ரூ.3.00 லட்சம் | Shri Sathya Dyes and Chemicals, 1/123, ஆசாரி பட்டி ரோடு, ஸ்ரீனிவாசா நகர், ஆண்டிபட்டி மதிப்பீட்டு விலையை விட 0.11 % குறைவு | Shri Sathya Dyes and Chemicals, 1/123, ஆசாரி பட்டி ரோடு, ஸ்ரீனிவாசா நகர், ஆண்டிபட்டி மதிப்பீட்டு விலையை விட 0.11 % குறைவு |
| | | | People Chemical Industries பாலகோம்பை மெயின் ரோடு, ஆண்டிபட்டி மதிப்பீட்டு விலையை விட 2.27 % அதிகம் | |

**<u>அலுவலகக்குறிப்பு</u> :-**

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Shri Sathya Dyes and Chemicals, ஆண்டிபட்டி நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 162/2019/இ1)

**தீர்மான எண்:** 743

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

21. **<u>பொருள்</u> :–** பெரியகுளம் நகராட்சி தென்கரை வார்டு 20 மற்றும் 24 ஆகிய பகுதிகளில் உள்ள பழைய ஆழ்குழாயில் புதிய மினிபவர் பம்ப் அமைத்தல் மற்றும் 24வது வார்டு தெற்குப்புதுத் தெரு காளியம்மன் கோவில் அருகில் உள்ள மினிபவர் பம்ப் அமைப்பை மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் வார்டு எண். 19 & 20 –ல் விஸ்தரிப்பு பகுதியில் புதைவடிகால் குழாயினை மாற்றி அமைத்து சந்திப்பு தொட்டி (Junction Rub) அமைத்தல் மற்றும் வார்டு பகுதிகளில் உள்ள பொதுக் குழாய்கள் குடிநீர் வீணாகாத வண்ணம் பழுது பணிகள் மேற்கொள்ள வேண்டி 26.09.2019ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் விபரம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | பெரியகுளம் நகராட்சிக்கு தென்கரை வார்டு எண்.20 மற்றும் 24ல் பழைய ஆழ்குழாயில் புதிய மினிபவர் பம்ப் அமைத்தல் மற்றும் வார்டு எண்.19 மற்றும் 20ல் புதைவடிகால் குழாய் மாற்றி அமைக்கும் பணி செய்தல் | ரூ.4.00 லட்சம் | M/s.C.நல்லகுரும்பன் &Co., ஒப்பந்ததாரர், தேனி மதிப்பீட்டு விலையை விட 0.27 % குறைவு | M/s.C.நல்லகுரும்பன் &Co., ஒப்பந்ததாரர், தேனி மதிப்பீட்டு விலையை விட 0.27 % குறைவு |
| 2. | | | M/s.ராஜ் இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனம் ஒப்பந்ததாரர், தேனி மதிப்பீட்டு விலையை விட 1.60 % அதிகம் | |

**<u>அலுவலக குறிப்பு</u> :-**

1. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s.C.நல்லகுரும்பன் &Co., தேனி ஒப்பந்ததாரருக்கு பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.களண். 1725/2019/இ1)

**தீர்மான எண்:** 744

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

22. **<u>பொருள்</u> :–** பெரியகுளம் நகராட்சி பகுதியில் தென்கரை வார்டு எண்.27ல் மதுரை மெயின் சாலையில் உள்ள தண்டுபாளையம் பகுதியில் தெருவிளக்குகள் இல்லாமல் இருள் சூழ்ந்து உள்ளதால், மேற்படி பாலத்தின் இருபகுதியிலும் தெருவிளக்குகள் அமைக்க காவல்துறை மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் கோரிக்கை வைக்கப்பட்டது. அதன்படி மேற்படி பகுதியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன்படி தண்டுபாளையத்தின் பாலத்தில் புதிதாக தெருவிளக்கு கம்பங்கள் அமைத்து 100 வாட்ஸ் LED மின் விளக்குகள் அமைக்கும் பணிகள் செய்திட அனுமதிக்கும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

(ந.களண். 1862/2019/இ1)

**தீர்மான எண்:** 745

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

23. **<u>பொருள்</u> :–** பெரியகுளம் நகராட்சி கலவை உரம் கிடங்கு பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்று நீர் மற்றும் வடிகால் நீரினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் ஆய்வு செய்யப்பட்டது. அதன்படி ஆய்வுக் கட்டணமாக நாள்.02.04.2019ல் ரூ.4310/–மற்றும் நாள்.08.04.2019 ரூ.2210/–, நாள்.20.06.2019 ரூ.2210/– ஆக மொத்தம் ரூ.8730/– க்கு கடிதம் வரப்பட்டது. அதன்படி மேற்படி ஆய்வுக் கட்டணத்தொகை ரூ.8730/–ஐ (எட்டாயிரத்து எழுநூற்று முப்பது ரூபாய் மட்டும்) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அவர்களுக்கு வழங்க மன்றப்பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :-**

மேற்கண்ட ஆய்வுக் கட்டணத்தொகையினை இந்நகராட்சி குடிநீர் மற்றும் புதைவடிகால் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1763/2019/இ2)

**தீர்மான எண்:** 746

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

24. **<u>பொருள்</u> :–** பெரியகுளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் புதிய கட்டிடம் கட்ட அனுமதி கோரும் போது அம்மனைக்கு வைப்புத்தொகை மனுதாரர் செலுத்தியுள்ளார். தற்போது வைப்புத் தொகை காலங்கடந்த பதிவேட்டின் பகுதி: II பக்கம் எண்:83 மற்றும் வரிசை எண்: 67ல் (02.12.2013) தேதியன்று திருமதி.மலர்விழி என்ற பெயரில் ரூ.5000/–மட்டும் பதிவாகியுள்ளது. மேற்படி வைப்புத்தொகை மூன்று வருடங்களுக்கு மேல் காலங்கடந்த வைப்புத் தொகையாக இருப்பதால் அன்னார்க்கு வைப்புத் தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :-**

மன்ற அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1234/2019/பி3)

**தீர்மான எண்:** 747

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

25. **<u>பொருள்</u> :–** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.2868/2018/டிபி2, நாள்.14.02.2019– இல் குறிப்பிட்டுள்ள அரசாணை (4D) எண்.2 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC – 1) நாள்.05.08.2018–ன்படி தமிழ்நாடு உள்ளாட்சிகள் விளம்பர பலகைகள் முறைப்படுத்துதல், வரிவிதித்தல் மற்றும் வரி வசூலித்தல் விதிகள் திருத்தங்கள் வெளியிடப்பட்டன. மேலும் இப்பொருள் தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை வழக்கு எண்.W.P (MD) No.18345/2018, 18346/2018, 18353 / 2018 மற்றும் 18366/2018 வழக்குகளில் அறிவுறுத்தியவாறு விளம்பர பலகைகள் இதுவரை நிராகரிக்கப்படாமல் நிலுவையிலுள்ள தனிநபர் விண்ணப்பங்கள் உள்ளாட்சிகளில் நிராகரிக்கப்படாது எனவும், இவ்வழக்கு முடிவுக்கு வரும் வரை தனிநபர் விளம்பர வணிகத்தில் எதிர்மனுதாரர்கள் தலையிடமாட்டார்கள் எனவும் அரசு சார்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. எனவே எதிர்வரும் தீர்ப்பின்படி நடவடிக்கை எடுக்கும்பொருட்டு உறுதி செய்து கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :-**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1079/2007/எப்1)

**தீர்மான எண்:** 748

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

26. **<u>பொருள்</u> :–** பெரியகுளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தெரு விளக்கு ஒப்பந்தப் பராமரிப்பு பணிக்காக வைப்புத்தொகையாக ரூ.21480/–பிடித்தம் செய்யப்பட்டு. தற்போது வைப்புத் தொகை காலங்கடந்த பதிவேட்டின் பகுதி: II ல் பக்கம் எண்:15 மற்றும் வரிசை எண்:325 ( 01.03.2016 ) தேதியன்று திரு.சடையாண்டி ஏஜென்ஸி என்ற பெயரில் ரூ.21480./–மட்டும் பதிவாகியுள்ளது.மேற்படி வைப்புத்தொகை மூன்று வருடங்களாக காலங்கடந்த வைப்புத்தொகையாக இருப்பதால் அன்னார்க்கு வைப்புத்தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்ற அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1188/2019/பி3)

**தீர்மான எண்:** 749

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

27. <u>பொருள்</u> **:–** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 30 வரையான வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளான கொசுப்புழு ஒழிப்பு, முதிர்கொசு ஒழிப்பு பணிகள் 30 களப்பணியாளர்கள் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணயாளர்கள் பணிமேற்கொள்வதற்கு தேவையான டார்ச் லைட், கிளவுஸ், அவுன்ஸ் கிளாஸ், திருப்புளி போன்ற பொருட்கள் வாங்கி வழங்கப்பட்டமைக்கான செலவினம் தொகை ரூ.4800/– ஐ திரு.அலெக்சாண்டர் துப்புரவு ஆய்வர் அவர்கள் மூலமாக செலவினம் தொகை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்து செலவினத்தொகையினை வழங்க கோரியுள்ளார். எனவே அன்னாருக்கு தொகை ரூ.4800/– (ரூபாய் நான்காயிரத்து என்னூறு மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தொகை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4039/2015/எச்1)**

**தீர்மான எண்:** 750

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

28. <u>பொருள்</u> **:–** இந்நகராட்சி பகுதியில் பராமரிப்பின்றி சுற்றித்திரியும் மாடுகளால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளதாக புகார்கள் வந்த வண்ணம் இருந்தமையால் விலங்குகள் நலவாரியத்தின் வழிகாட்டுதலின்படி, விலங்குகள் நலவாரியத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான மாஸ் அறக்கட்டளை மூலமாக மாடுகள் பிடித்து அப்புறப்படுத்தப்பட்டது. மேற்படி அறக்கட்டளை மூலம் மாடுகளை பிடித்து நகராட்சியினரால் தெரிவிக்கப்படும் இடத்தில் ஒப்படைப்பு செய்யவும் தெரிவிக்கப்பட்டது. எனவே இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பராமரிப்பில்லாமல் சாலைகளில் சுற்றித்திரிந்த 11 மாடுகள் மேற்படி மாஸ், அறக்கட்டளையின் மூலமாக பிடித்து அப்புறப்படுத்தப்படமைக்கு பட்டியல் தொகை வழங்க கோரியுள்ளனர். எனவே மாடு ஒன்றிற்கு ரூ.1000/– வீதம் மொத்தம் 11 மாடுகளுக்கு ரூ.11,000/– (ரூபாய் பதினொன்றாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினம் தொகை இந்நகரட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 450/2005/எச்1)**

**தீர்மான எண்:** 751

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

29. <u>பொருள்</u> **:–** இந்நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகர்பகுதிகளில் உருவாகும் திடக்கழிவுகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம்பிரித்து வழங்க பொதுமக்களுக்கு தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள் மூலம் வீடுதோறும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கலர் நோட்டீஸ்கள் M.K.Multi Color Offset Press, பெரியகுளம் அச்சகம் மூலம் அச்சடித்து வழங்கப்பட்டமைக்கு மேற்கொள்ளப்பட்ட செலவினம் தொகை இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் திரு.அசன் முகமது அவர்கள் மேற்கொண்டதாக தெரிவித்து மேற்படி தொகை ரூ.4800/– திரும்ப வழங்க கோரியுள்ளார். எனவே அன்னாருக்கு தொகை ரூ.4800/– (ரூபாய் நான்காயிரத்து என்னூறு மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினம் தொகை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 655/2015/எச்1)**

**தீர்மான எண்:** 752

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

30. **பொருள் :–** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை முதிர் கொசு ஒழிப்பு பணிக்கு தேவையான புகைமருந்து அடிக்கும் இயந்திரம் (Fogging Machine) மிகவும் பழுதடைந்து விட்டதாலும், பருவமழை ஆரம்பமாகி உள்ளதாலும் தீவிரமாக முதிர்கொசு ஒழிப்பு பணி மேற்கொள்வதற்கு தேவைப்படும் Indoor Fogging Machine (Mini) 2 எண்ணங்கள் மற்றும் Outdoor Fogging Machine (Thermal Fogging) 2 எண்ணங்கள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.1,50,000 (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினம் தொகை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4039/2015/எச்1)**

**தீர்மான எண்:** 753

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

31. **பொருள் :–** பெரியகுளம் நகராட்சி வடகரை மற்றும் தென்கரையில் உள்ள மக்களிடையே வீடுகள் மற்றும் கடைகள், வணிக வளாகங்கள், அரசு கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க வேண்டி விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகள் செய்வதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.706, நாள்.07.08.2019ல் அனுமதி பெறப்பட்டதன்படி, விழிப்புணர்வு நோட்டீஸ் அச்சடிக்கும் பணியினை செய்வதற்கு விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் | விலைப்புள்ளி தொகை (1 எண்ணம்) |
|---|---|---|
| 1 | Parvin Computer Xerox, Maruthupandian Street, K.K.Nagar, Madurai | 0.95 பைசா |
| 2 | Alamelu Printing press and Screen, Simmakkal, Madurai | 1.00 ரூபாய் |
| 3 | Devan Offset Printers, Annanagar, Madurai | 1.50 ரூபாய் |

**அலுவலக குறிப்பு :-**

1. மேற்கண்ட பணிகள் செய்வதற்கு விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Parvin Computer Xerox, Maruthupandian Street, K.K.Nagar, Madurai அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று படிவம் அச்சடிக்க வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1249/2019/இ2)

**தீர்மான எண்:** 754

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

32. **பொருள்:–** இந்நகராட்சி பகுதியில் 2019 உள்ளாட்சி தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு மேற்படி தேர்தல் பணியான வாக்குச்சாவடி பட்டியல் தயார் செய்தல், தேர்தலுக்கு தேவையான பொருட்கள் வாங்குதல், அனைத்து வாக்கு சாவடிகளுக்கு தேவையான பணிகளை மேற்கொள்ளுதல், வாக்குச்சாவடி மையங்களில் பணி மேற்கொள்ளும் அலுவலர்கள் மற்றும் தேர்தல் பணிகள் மேற்கொள்ளும் அனைத்து அலுவலர்களுக்கும் மதிப்பூதியம் வழங்குதல், வாக்கு எண்ணும் மையத்திற்கு தேவையான அனைத்து பணிகளையும் மேற்கொள்ளுதல் மற்றும் உள்ளாட்சி தேர்தல் பணிகள் மேற்கொள்ளுவதற்கு தேவையான இதர செலவினங்கள் மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ30.00லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

2019 உள்ளாட்சி தேர்தல் பணிகள் மேற்கொள்ளுவதற்கு தேவையான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1056/2019/எப்1)

**தீர்மான எண்:** 755

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

33. **பொருள்:–** இந்நகராட்சியில் கட்டிட வரைபடவரைவாளராக பதிவு செய்து உரிமம் வழங்கும்படி கோரி விண்ணப்பம் செய்துள்ளனர். சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.50977/2018/டிபி3, நாள்.07.03.2019ன்படி தகுதி உடையவர்களை பதிவு பெற்ற கட்டிட படவரைவாளர்களாக நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் Screening Committee கீழ்கண்ட நகராட்சி அலுவலர்களை கொண்டு அமைக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி 1. ஆணையாளர்,
2. நகராட்சிப்பொறியாளர்,
3. நகரமைப்பு ஆய்வாளர்

மேற்குறிப்பிட்ட அலுவலர்களை நியமனம் செய்ய மன்றத்தின் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மேற்கண்ட கட்டிடபட வரைவாளர்கள் நியமனம் செய்திட குழு அமைக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.705/2007/எப்1)

**தீர்மான எண்:** 756

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

34. <u>பொருள்:</u>– பெரியகுளம் நகராட்சியில் கட்டிட வரைபட வரைவாளர்களாக பதிவு செய்ய கீழ்க்கண்ட 3 நபர்கள் விண்ணப்பித்துள்ளனர். மேற்படி கட்டிடபடவரைவாளர்களின் ஆவணங்கள் ஆய்வு செய்து சரிபார்க்கப்பட்டது. மேற்படி 3 நபர்கள் கட்டிடபடவரைவாளராவதற்கு தகுதியுடையவர்களாக உள்ளதால் இந்நகராட்சியில் கட்டிட வரைவாளர்களாக ஐந்துவருடங்களுக்கு மட்டும் நியமனம் செய்ய ScreeningCommittee–ன் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பெயர் விபரம் |
|---|---|
| 1. | திரு.எஸ்.நௌசாத் |
| 2. | திரு.டி. ராஜ்சேகர் |
| 3. | திரு.ஆர்.விஜய்சங்கர் |

**<u>அலுவலக குறிப்பு</u> :–**

மேற்கண்ட கட்டிடபட வரைவாளர்கள் நியமனம் செய்திட Screening Committee யின் மூலம் ஒப்புதல் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.705/2007/எப்1)

**தீர்மான எண்:** 757
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்) ரா. கமலா**
**தனி அலுவலர்**

/உண்மை நகல்/

**ஆணையாளர்(பொ)**
**பெரியகுளம் நகராட்சி**